அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுக்கு எழுதிய 1,2 நிருபங்கள்

இளம் ஊழியனுக்கு...

தீமோத்தேயுக்கு எழுதின நிருபங்களின் பின்னணி

- பவுலின் தொடர்ச்சியான இறுதிக் கடிதங்களில் இது முதலாவது. 1,2 தீமோத்தேயு, தீத்து ஆகிய நிருபங்கள் "மேய்ப்பனின் நிருபங்கள்" என்று அழைக்கப்படுகிறது. எபேசு சபையில் ஊழியப்பணியில் ஈடுபட்டுள்ள இளைஞனான தீமோத்தேயுவிற்கு வயது முதிர்ந்தவரான பவுல் கூறும் மேய்ப்பனின் அறிவுரையே இந்த நிருபம்.
- பவுலிடமிருந்து இந்த நிருபத்தை பெற்றுக்கொள்ளும் தீமோத்தேயு லிஸ்தீரா பட்டணத்தை சேர்ந்தவர் (தற்போதைய துருக்கி). தீமோத்தேயுவின் தகப்பன் கிரேக்கர், தாய் யூத கிறிஸ்தவள் (அப் 16:1)
- அவரது சிறுவயது முதல்கொண்டே அவருக்கு பழைய ஏற்பாட்டு கற்றுக்கொடுக்கப்பட்டது (2தீமோ 1:5,3:15)
- பவுல் இவரை "விசுவாசத்தில் உத்தம குமாரன்" என்று அழைக்கிறார். ஒருவேளை பவுல் லிஸ்தீராவில் இருந்தபோது தீமோத்தேயுவை விசுவாசத்திற்குள் நடத்தியிருக்கலாம்.
- பவுல் இரண்டாவது தடவை வந்தபோது தமது மிஷனரிப்பயணத்தில் தன்னுடன் வரும்படி தீமோத்தேயுவை அழைத்தார். யூதர்கள் மத்தியில் ஊழியம் செய்வதற்கு தீமோத்தேயுவின் கிரேக்க பின்னணி தடையாய் இராதபடிக்கு அவருக்கு விருத்தசேதனம் செய்வித்தார் (அப் 16:3)
- பவுலின் மக்கேதோனியா, ஆகாயா ஊழியங்களில் தீமோத்தேயு உதவியாக இருந்தார் (அப் 17:14-15,18:5). பவுல் எபேசுவில் செய்த நீண்டகால உபதேச ஊழியங்களிலும் அவரோடு இருந்திருக்கிறார் (அப் 19:22).
- பவுலோடுகூட எபேசுவிலிருந்து மக்கேதோனியாவிற்கும்,கொரிந்துவிற்கும்(அப் 20:3), அங்கிருந்து மீண்டும் மக்கேதோனியாவிற்கும், சின்னஆசியாவுக்கும் பயணித்தார்.

தீமோத்தேயுக்கு எழுதின நிருபங்களின் பின்னணி

- பவுல் முதல் முறை சிறைவைக்கப்பட்டபோது பவுலுடன் இருந்தார் (பிலி1:1,கொலோ 1:1, பில1)
- பவுலுக்கும் தீமோத்தேயுவுக்கும் இருந்த நெருக்கத்தையும், பவுல் அவரை புகழ்ந்துரைப்பதையும் பவுலின் 6 நிருபங்களில் அவரது பெயரை அவரும் அந்த நிருபத்தை அனுப்புகிறவர்களில் ஒருவர் என்று குறிப்பிடுவதிலும் (2கொரிந்தியர், பிலிப்பியர், கொலோசேயர்,1,2தெசலோனிக்கேயர்,பிலமோன்) பிலிப்பியரில் அவரைக் உயர்வாய் பேசுவதிலிருந்தும் அறியலாம் (பிலி 2:19-22)
- பவுல் தனது வாழ்வின் இறுதிக்காலத்தில் தீமோத்தேயுவை ரோமாபுரியில் தன்னோடு இணைந்துகொள்ள அழைக்கிறார் (2தீமோ 4:9,21)
- எபி 13:23ன்படி தீமோத்தேயுவும் சிறையிலிருந்து பின்னர் விடுவிக்கப்பட்டிருக்கிறார். அது ரோமாபுரியிலா அல்லது வேறிடத்திலா என்பது அறியப்படவில்லை.
- தீமோத்தேயு கூடவேயிருப்பது பவுலுக்கு முக்கிய காரியமாக இருந்தது. இந்த நட்பினாலே தனது நண்பரும் மிஷனரி பங்காளருமான பர்னபாவிடம் இருந்து பிரிய நேர்ந்தது (அப் 15:36-41)
- இந்த உண்மையுள்ள ஊழியக்காரனை பவுல் எபேசுவில் விட்டுவிட்டு வந்ததை பாராட்டாமல் இருக்கமுடியாது (1தீமோ 1:3)
    - 1 தீமோத்தேயு: அதிகாரங்கள் 6 வசனங்கள் 113
    - 2 தீமோத்தேயு: அதிகாரங்கள் 4 வசனங்கள் 83

தீமோத்தேயுக்கு எழுதின முதலாவது நிருபம்

- தீமோத்தேயுக்கு எழுதின 1வதுநிருபம், சபையின் தலைமைத்துவத்திற்கும், முழுத் திருச்சபைக்கும் வேண்டிய முழுமையானதும், விளக்கமானதுமான அறிவுரையை தருகிறது.
- இதில் ஆராதனைக்கு கூடிவரும்போது நடந்துகொள்ளவேண்டிய வகையையும், மூப்பர்களுக்கும், உதவிக்காரர்களுக்கும் இருக்கவேண்டிய தகுதிகளையும், சபையின் ஒழுங்குநடவடிக்கையை செயற்படுத்த வேண்டிய விதத்தையும் இந்த நிருபத்தில் எழுதுகிறார்.
- இந்த நடைமுறை காரியங்களில் பவுல் தீமோத்தேயுக்கு அறிவுரைகூறியது ஒருவகையில் கிறிஸ்தவ தலைவர்களுக்கும், அவர்கள் மேற்பார்வை செய்யும் கூடிவருவோருக்கும் இருக்கவேண்டிய பரிசுத்தத்தை வலியுறுத்த இளம் ஊழியக்காரனுக்கு உதவிகரமாய் இருந்திருக்கும்.
- தீமோத்தேயு இளமையாய் இருந்ததால் அவர் ஊழியஞ்செய்யும் ஜனத்திற்கு சேவை செய்ய தேவையான ஆற்றலும், வீரியம் அவரிடம் இருந்தது.
- ஆயினும் சபையில் இருந்த வயதில் மூத்த கிறிஸ்தவர்கள் தலைமைத்துவத்திற்கு போதுமான அறிவோ, அனுபவமோ இளவயது தீமோத்தேயுவுக்கு இருக்காது என்று கருதி அவருடைய தலைமையை ஏற்றுக்கொள்ள தயங்கினார்கள்.
- தீமோத்தேயு உறுதியான விசுவாசமும், நல்மனச்சாட்சியும் உடையவராய் குற்றமற்றவராய் காணப்படுவதோடு தேவன் அவருக்கு அளித்திருக்கும் ஆவிக்குரிய வரங்களை உபயோகப்படுத்த வேண்டும் என்பது பவுலுக்கு முக்கியமாய் இருந்தது. (1தீமோ 4:12-16)

தீமோத்தேயுக்கு எழுதின இரண்டாவது நிருபம்

- தீமோத்தேயுக்கு எழுதின 2வதுநிருபம், பவுலின் மரணத்திற்கு முன்பான அவரது ஊழியத்தின் இறுதிக்காலம் குறித்த காரியங்களை அறியத்தருகிறது.
- அவர் முதலாவது சிறையில் அடைக்கப்பட்டபோது அவர் 'வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே' வாழ்ந்தார் (அப் 28:30). ஆனால் தற்போது அதற்கு முற்றிலும் எதிரான குளிரான இருண்ட சிறையில் (2தீமோ 4:3) மற்ற குற்றவாளி களைப்போல சங்கிலிகளால் கட்டப்பட்டு இருந்தார்.
- அவர் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார் என்பதை அறிவது அவர்களது நண்பர்களுக்கு கடினகாரியமாயிருந்தது (1:17)
- ஒரு குறிக்கப்பட்ட எண்ணிக்கையுள்ள நபர்களை குறிப்பிடுகிறார். அதில் சிலர் அவருக்கு எதிராக செயல்பட்டவர்கள் - சிலர் உண்மையும் உத்தமமுமாய் அவரோடு பணிசெய்தவர்கள் (2தீமோ 4:9-21)
- பவுல் சிறைச்சாலையில் இருக்கும்போது சிலர் அவரைவிட்டு விலகிப்போனார்கள். வேறுசிலர் அவர் கொடுத்த பணியினை நிறைவேற்றச் சென்றார்கள் (1:15,4:9-12)
- பவுல் தனது பணிகள் நிறைவுபெற்றது என்றும், அவரது வாழ்வின் இறுதிக்கட்டம் நெருங்கிவிட்டது என்றும் அறிந்தவராய் (4:6-8) தனது இறுதிச் செய்தியை தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார்.
- இந்த நேரத்திலும் பவுல் தீமோத்தேயுவின் உண்மையையும், அர்ப்பணிப்பையும் நினைவுகூர்ந்து எழுதியது மனதை தொடுவதாய் உள்ளது (1:3-5)

தீமோத்தேயுக்கு எழுதின இரண்டாவது நிருபம்

- பவுல் தீமோத்தேயு உறுதியாயிருக்கவும், தனது மரணதண்டனை நிறைவேற்றப்பட முன் தன்னை வந்து சந்திக்குமாறும் கேட்டுக்கொள்கிறார்.
- பவுல் தனது முடிவுகாலம் வரையில் படித்துக்கொண்டிருக்கவும், எழுதிக்கொண்டிரு க்கவும்வேண்டி தீமோத்தேயுவிடம் தனது தோற்சுருள்களையும், புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு வரும்படி கேட்கிறார்.
- பவுல் தான் தீமோத்தேயுக்கு கற்றுக்கொடுத்தவைகளிலும், இளம் ஊழியக்காரனுக்கு பவுலினால் மாத்திரமல்ல அவரது தாயாராலும், பாட்டியினாலும் அளிக்கப்பட்ட மாயமற்ற விசுவாசத்திலும் உறுதியாய் தொடர வேண்டுகிறார் (1:5-6,3:14-15)
- முதிர் வயது அப்போஸ்தலனாக பவுல் அளித்த ஊக்குவிப்பு, பவுல் நான்கு ஆண்டுகளுக்கு முன்பதாக தீமோத்தேயுக்கு எழுதிய நிருபத்தில் முக்கியமாக பயன்படுத்திய வார்த்தையில் விளங்குகிறது.
- அந்த முந்திய நிருபத்தில் பவுல் "நல்ல போராட்டம் பண்ணு" என்று அறிவுறுத்தினார் (1தீமோ 1:18,6:12)
- ஆனால் இந்த இறுதி நிருபத்திலோ அதே சொற்தொடரை தமக்குப் பயன்படுத்தி "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" என்று எழுதினார் (2தீமோ 4:7)

தீமோத்தேயுக்கு எழுதின இரண்டாவது நிருபம்

பவுல் தீமோத்தேயுக்கு எழுதின 2வதுநிருபம், ஒரு இளம் ஊழியக்காரனுக்குக்கான சில கட்டளைகளை கொண்டிருக்கிறது.

1. சுவிஷேசத்தை காத்துக்கொள் அதற்காக போராடு

பவுல் பிரசங்கியாக, அப்போஸ்தலனாக, சுவிஷேச ஆசிரியனாக நியமிக்கப்பட்டவர், அதை காத்து (1:12-13) மற்றவர்களிடத்தில் ஒப்புவிக்கவேண்டிய (2:2) பொறுப்பு தீமோத்தேயுக்கு உள்ளது.

தீமோத்தேயுக்கு முன்பாக உள்ளபாதை பாடுகளின் பாதை (1:8,2:3) ஆனால் தீமோத்தேயு உறுதியுடன் தைரியமாக நல்ல போராட்டத்தைபோராட பவுல் அவரை உற்சாகப்படுத்துகிறார் (1:7,2:1)

2. நீதியை தொடரு

தீமோத்தேயுவின் வேலையை குலைத்து ஜனங்களை அவபக்திக்குள்ளாக்குகிற பலர் அங்கு இருக்கிறார்கள்.

தீமோத்தேயுவும் மற்ற விசுவாசிகளும் வேதவசனத்தை சரியாக கையாண்டு, வீண்பேச்சுக்களுக்கு விலகியிருந்து, பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடி, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடவேண்டும்.

3. சத்திய வசனத்தை உண்மையாக போதிப்பதை தொடரு

விசுவாசதுரோகம் எதிர்காலத்தில் நேரிடவிருப்பதால் தீமோத்தேயு வேதவசனங்களை நினைத்துக்கொள்ள வேண்டும்.

4. சத்திய வசனத்தை பிரசங்கி

வசனத்தை பிரசங்கி என்பதே பவுல் தீமோத்தேயுவுக்கு கொடுத்த இறுதிக்கட்டளை. தீமோத்தேயு சபைக்கு சத்தியத்தை பிரசங்கிப்பது மாத்திரமல்ல தொலைந்து போனவர்களுக்கும் வசனத்தை கொண்டுபோக வேண்டும்.

தீமோத்தேயுக்கு எழுதின முதலாவது நிருபம்

- வாழ்த்துக்கள் 1:1-2
- கள்ளப்போதகர்கள் குறித்த எச்சரிக்கை 1:3-11
    - துர்உபதேசத்தின் தன்மை 1:3-7
    - நியாயப்பிரமாணத்தின் நோக்கம் 1:8-11
    - தேவன் பவுலுக்கு அளித்த கிருபை 1:12-17
    - தீமோத்தேயுவுக்கு பவுல் அறிவுரை வழங்கியதன் நோக்கம் 1:18-20
- சபை நிர்வாகம் குறித்த அறிவுரைகள் அதி 2-3
    - பொதுவான வழிபாடு அதி 2
    - பொதுவான வழிபாட்டில் ஜெபம் (2:1–8)
    - பொதுவான வழிபாட்டில் பெண்கள் (2:9–15)
    - சபை பணியாளர்களுக்கான தகுதிகள் (3:1–13)
    - கண்காணிகள் (3:1–7)
    - மூப்பர்கள் (3:8–13)
    - அறிவுரை வழங்கியதன் நோக்கம் (3:14–16)
- கள்ளப்போதனைகள் குறித்த அறிவுரைகள் அதி 4
    - கள்ளப்போதனைகளின் விளக்கம் (4:1–5)
    - கையாளவேண்டிய வழிமுறைகள் குறித்த விளக்கம் (4:6–16)
- சபையில் உள்ள வித்தியாசமான பிரிவுகள் குறித்த அறிவுரைகள் (5:1-6:2)
    - முதியோரும், இளையோரும் (5:1–2)
    - விதவைகள் (5:3–16)
    - மூப்பர்கள் (5:17–25)
    - அடிமைகள் (6:1–2)
- பலவேறு விடயங்கள் (6:3–19)
    - கள்ள போதகர்கள் (6:3–5)
    - பணஆசை (6:6–10)
    - தீமோத்தேயுவுக்கான கட்டளை (6:11–16)
    - ஐசுவரியமுள்ளவர்கள் (6:17–19)
- இறுதி விண்ணப்பமும் ஆசீர்வாதமும் (6:20–**21**)

தீமோத்தேயுக்கு எழுதின இரண்டாவது நிருபம்

- அறிமுகம் (1:1–4)
- தீமோத்தேயு குறித்த பவுலின் கரிசனை (1:5–14)
- பவுலின் சூழ்நிலை (1:15–18)
- தீமோத்தேயுக்கு விஷேச அறிவுரை (அதி 2)
  - பாடுகள் சகிக்க அழைப்பு (2:1–13)
  - புத்தியில்லாத சர்ச்சைகளை குறித்த எச்சரிக்கை (2:14– 26)
- • கடைசிக்காலம் குறித்த எச்சரிக்கை (அதி 3)
  - கொடுமையான காலங்கள் (3:1–9)
  - எதிர்த்து நிற்பதற்கான வழிமுறைகள் (3:10–17)
- பவுலின் பிரியாவிடைக் குறிப்புகள் (4:1–8)
  - வார்த்தையை பிரசங்கிக்க கட்டளை (4:1–5)
  - பவுலின் வெற்றியுள்ள முடிவு (4:6–8)
- இறுதி விண்ணப்பமும் ஆசீர்வாதமும் (4:9–22)